# சாய்ந்தமருதூரின் வடக்கு எல்லையும்

## பொதுமக்கள் அறிய வேண்டிய உண்மைகளும்

ஜம்ஆ பெரிய பள்ளிவாசல்,
சாய்ந்தமருது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாய்ந்தமருதூரின் வடக்கு எல்லையும் பொதுமக்கள் அறியவேண்டிய உண்மைகளும்

சாய்ந்தமருதுக் கிராமத்தின் வடக்கு எல்லையிலுள்ள கே.பீ/53ம் இலக்கக் குறிச்சியில் பிரதான வீதிக்குக் கிழக்கே உள்ள ஒரு பகுதி கல்முனைக் குடியுடன் நியாயமற்ற முறையில் மிக இரகசியமாக 1987ஆம் ஆண்டில் இணைக்கப்பட்டுள்ளது.

தற்போது அதே (கே.பீ/53) குறிச்சியின் பிரதான வீதிக்கு மேற்கே உள்ள பகுதியில் சுமார் 315 மீற்றர் நீளமான நிலப்பரப்பையும் கல்முனைக்குடியுடன் மேலும் இணைத்துக்கொள்ள சிலர் முயற்சிக்கின்றனர்.

இவை பற்றிய உண்மைகளையும், சாய்ந்தமருதின் சரியான வடக்கு எல்லையையும் மக்களுக்கு அறிவிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்த சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் மரைக்காய சபை இப்பிர சுரத்தை வெளியிட விரும்புகின்றது.

## சாய்ந்தமருதின் பூர்வீகம்

1. கிழக்கு மாகாணத்தின் கரைவாகுப்பற்றுப் பிரதேசத்தில் சாய்ந்தமருது நீண்ட கால வரலாற்றினை உடைய ஒரு பழம் பெரும் கிராமமாகும். இக்கிராமத்திலிருந்துதான் பக்கங்களிலுள்ள கல்முனைக்குடி, மாளிகைக்காடு, மாவடிப் பள்ளி ஆகிய ஊர்களுக்கு மக்கள் குடியேறியுள்ளனர்.

2. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கிராம சேவகர் பிரிவுகளுக்கு இலக்கமிடப் பட்டபோது சாய்ந்தமருதுக்கு கே.பீ/47 தொடக்கம் கே.பீ/53 வரை ஏழு குறிச்சிகளாகவும், கல்முனைக்குடிக்கு கே.பீ/54 தொடக்கம் கே.பீ/58 வரை ஐந்து குறிச்சிகளாகவும், கல்முனைக்கு கே.பீ/59 தொடக்கம் கே.பீ/61 வரை மூன்று குறிச்சிகளாகவும் இலக்கமிடப்பட்டிருந்தன.

3. இக்குறிச்சிகளின் பொது நிருவாகம் ஆரம்பத்திலிருந்து விதானைமார் எனப்பட்ட பொலிஸ் தலைமைக்காரர், அதன்பின்னர் கிராமத்தலைவர்கள், அதன்பின்னர் கிராமசேவகர்கள், தற்போது கிராமசேவை உத்தியோகத்தர்கள் என்னும் உத்தியோகத்தர்களால் நிருவகிக்கப்பட்டு வந்துள்ளன.

4. மேலே காட்டப்பட்டுள்ள கே.பீ/53 இலக்கத்தை உடைய குறிச்சி சாய்ந்தமருது தமிழ்க் குறிச்சி என்ற பெயரில் ஒரு விதானையாராலேயே நிருவகிக்கப்பட்டு வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. 1928 ஆம் ஆண்டில் கே.பீ/47 தொடக்கம் கே.பீ/53 வரையுள்ள ஏழு குறிச்சிகளையும் உள்ளடக்கி கரைவாகு தெற்கு கிராமசபை (Karaivahu South V. C.) பத்து வட்டாரங்களைக் கொண்டதாக உருவாக்கப்பட்டிருந்தது.

கே.பீ/53 சாய்ந்தமருது தமிழ்க் குறிச்சி, கரைவாகு தெற்கு கிராமசபையின் 1ஆம், 2ஆம் வட்டாரங்களாக இருந்தது.

6. 1945ஆம் ஆண்டளவில் கல்முனை சனிற்ரறிபோட்டாக (Sanitary Board) இருந்து பட்டினசபை என்ற அந்தஸ்துப் பெற்ற போது கல்முனைப்பட்டின சபையின் ஏழாம் வட்டாரத்திற்கு வாக்காளர் தொகை அதிகரிக்கப்பட வேண்டியிருந்ததால், சாய்ந்தமருது கிராமசபையின் முதலாம் வட்டாரத்தில் 1 தொடக்கம் 97 வரையுள்ள வீட்டு அட்டவணைக்குரிய வாக்காளர்கள் கல்முனைப்பட்டின சபையுடன் சேர்க்கப்பட்டனர்.

ஆனால் இந்த 1 தொடக்கம் 97 வரையுள்ள குடும்பங்களின் உணவுப் பங்கீடு, பங்கீட்டு நிவாரணம், சகாயநிதி போன்ற பொதுநிர்வாகத்தின் பல்வேறு கருமங்களும் சாய்ந்தமருது கே.பீ/53 கிராமசேவகர் நிருவாகத்திலேயே இருந்து வந்துள்ளன.

## சாய்ந்தமருதின் எல்லைகள்

இக்கிராமத்தின் கிழக்கு எல்லையாக வங்காளவிரிகுடாக்கடலும், மேற்கு எல்லையாக குடாக்கரை கிழல் கண்டமும் இறை வெளிக்கண்டமும், தெற்கு எல்லையாக காரைதீவுக்கிராமமும் அமைந்துள்ளன.

**வடக்கு எல்லை**

பிரதான வீதியின் மேற்கில் தற்போதுள்ள ஸம். ஸம். அரிசி ஆலையின் வடக்கே அமைந்துள்ள ஊத்துமடு வீதி, பிரதான வீதியிலிருந்து மேற்கே இறைவெளிக்கண்டத்தை அடைகிறது.

பிரதான வீதிக்கு கிழக்கே G. S. வீதி என்ற பெயரோடு அல் - ஹாஜ். ஏ. எம். சம்சுதீன் (சட்டத்தரணி, வெளிநாட்டுத்தூதுவர்) அவர்களின் வீட்டின் வடபுறமாகக் கிழக்கு நோக்கிச் சென்று அரசடி வீதியில் சந்தித்து (நியூறோட்) ம:.மூத் மகளிர் கல்லூரியின் தற்போதைய வடபுற எல்லையுடன் இணைந்து கிழக்கு நோக்கிச் சென்று சாஹிறாக் கல்லூரி வீதியுடன் இணைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய்ந்தமருது கிராமசேவகர் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்ட காலம் தொட்டு கே.பி/53 இலக்கத்தையுடைய சாய்ந்தமருது தமிழ்க் குறிச்சி என்ற கிராமசேவகர் பிரிவு முழுவதும் 1986ஆம் ஆண்டு முடியும்வரை சாய்ந்தமருது கிராமத்தின் ஒரு பகுதியாக இருந்து வந்துள்ளதென்பதைப் பின்வரும் அத்தாட்சிகள் நிரூபிக்கின்றன.

1. கே.பீ/53 ஆம் இலக்கத்தையுடைய இக்கிராம சேவகர் பிரிவின் 1986ஆம் ஆண்டின் தேர்தல் வாக்காளர் இடாப்பைப் பார்வையிட்டால் சாய்ந்தமருது தமிழ்க் குறிச்சி என்றே குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணமுடியும்.

2. கே.பீ/53 ஆம் இலக்கக் கிராமசேவகர் பிரிவு முழுவதும் பொது நிருவாக அமைச்சின் ஓரே அலகாக சாய்ந்தமருது தமிழ்க் குறிச்சி என்னும் பெயரில் ஒரு கிராம சேவகரால் நிருபிக்கப்பட்டு வந்துள்ளது.

3. கே.பீ/53ஆம் இலக்க கிராமசேவகர் பிரிவிலுள்ள வளவுகளின் உறுதிகளில் சாய்ந்தமருது தமிழ்க் குறிச்சி என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இப்பகுதியில் பிறந்தவர்களின் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகளிலும் சாய்ந்த மருது தமிழ்க் குறிச்சி என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

5. சாய்ந்தமருது அல் அமான் வித்தியாலயமே கல்முனை ம.்.மூத் மகளிர் மகா வித்தியாலயமாக மாற்றப்பட்டுள்ளதென்பதை யாவரும் நன்கு அறிவர்.

6. ம.்.மூத் மகளிர் கல்லூரியின் விஸ்தரிப்புக்காக அதன் அயலில் உள்ள நிலங்களை சுவீகரித்த அரச வர்த்தமானியில் சாய்ந்தமருது தமிழ்க் குறிச்சி என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. அரச வர்த்தமானியின் இல : 195 திகதி 1975 - 12 - 19 ஆகும். (பிரதி இணைக்கப்பட்டுள்ளது)

7. தற்போது சாய்ந்தமருது முதலாம் குறிச்சிக்கு கிராமசேவகராக இருக்கும் ஜனாப். ஐ. எல். சேகிஸ்மாயில் என்பவரே 1987ஆம் ஆண்டுவரை கே.பீ/53ஆம் இலக்கக் குறிச்சிக்கு கிராமசேவகராக இருந்துள்ளார்.

8. இப்பகுதி சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் நிருவாகத்தின் கீழேயே இருந்து வந்துள்ளமைக்கு போதிய சான்றுகள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கே.பீ/53 கிராமசேவகர் பிரிவுக்கு நடந்தது என்ன?

சாய்ந்தமருது கிராமத்தின் வடக்கு அந்தமான கே.பீ/53ஆம் இலக்கக் குறிச்சியில் பிரதான வீதிக்குக் கிழக்கே உள்ள ஒரு பகுதியை 1987ஆம் ஆண்டு சில சுயநலவாதிகள் மிக இரகசியமாக நியாயமற்ற முறையில் கல்முனைக்குடி கே.பீ/54 பிரிவுடன் (தற்போதுள்ள 13ஆம், 14ஆம் குறிச்சிகளோடு) இணைத்துக் கொண்டனர்.

## தற்போது நடப்பதென்ன?

கே.பீ/53ஆம் இலக்கக் குறிச்சியின் பிரதான வீதிக்கு மேற்கே உள்ள பகுதியில் சுமார் 315 மீற்றர் நீளமான பிரதேசத்தையும் கல்முனைக்குடியுடன் இணைப்பதற்கு சிலர் முயற்சிக்கின்றனர்.

1996 - 09 - 06ஆம் திகதி துணைத்தவிசாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கல்முனைப் பிரதேசசபைக் கூட்டத்தில் கவனயீர்ப்புப் பிரேரணையாக சாய்ந்தமருது கிராமத்தின் கே.பீ/53ஆம் பிரிவில் எஞ்சிய பகுதியான வடக்கே ஸம் ஸம் அரிசி ஆலையையும், கிழக்கே கல்முனை அக்கரைப்பற்று வீதியையும் தெற்கே கானடி ஒழுங்கையையும், மேற்கே இறை வெளிக்கண்டத்தின் பகுதியையும் உள்ளடக்கிய பகுதியைக் கல்முனைக்குடி 13 அல்லது 14ஆம் கிராமசேவகர் பிரிவுடன் இணைக்க வேண்டுமென ஐக்கியதேசியக்கட்சி உறுப்பினர் ஜனாப். எம். எம். ஜெமீல் அவர்கள் பிரேரிக்க, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஜனாப். ஐ. எல். அப்துல் அஸீஸ் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு, சபை உறுப்பினர்களின் எதிர்ப்புக்கள், ஆலோசனைகள் புறக்கணிக்கப்பட்டு பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. (பிரேரித்த ஆமோதித்த உறுப்பினர்கள் கல்முனைக்குடியைச் சேர்ந்தவர்களாவர்)

இந்த முறையற்ற செயலைப்பற்றி அறிந்ததும் சாய்ந்தமருது ஜும்ஆ பெரியபள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையும், சாய்ந்தமருது சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுவும் எதிர்ப்புக்களை உரியவர்களுக்குத் தெரிவித்துள்ளன.

அம்பாரைக் கச்சேரியில் அண்மையில் நடைபெற்ற அம்பாரை மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்திலும், கிராமசேவகர் பிரிவுகளை நேராக்கல் சீராக்கல் என்ற போர்வையில் குறித்த கே.பீ/53ஆம் இலக்க குறிச்சியின் பிரதான வீதிக்கு மேற்கே உள்ள பகுதியைக் கல்முனைக்குடியுடன் சேர்க்கவேண்டுமெனச்சிலரால் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதுபற்றித் தினகரன் பத்திரிகையில் செய்திகள் வெளிவந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுதுள்ள கல்முனைப் பிரதேசசபை, கரைவாகுவடக்கு, கரைவாகு தெற்கு, கரைவாகு மேற்கு, கல்முனைப்பட்டினம் ஆகிய நான்கு உப அலகுகளைக் கொண்டதாகும்.

கல்முனைப் பிரதேசசபை, நகரசபை அல்லது மாநகரசபையாக ஆனாலும் எவ்வித பிரச்சினையும் இல்லை. மக்களுக்கு நன்மை பயக்கக் கூடியதாக இருந்தால் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டியது நமது கடமையாகும்.

ஆனால் ஒரு ஊரின் நிலப்பரப்பின் ஒரு பகுதியை நியாயமற்ற முறையில் அபகரித்து எல்லையை மாற்றியமைக்கும் செயலை எவரும் அனுமதிக்க முடியாது.

## இந்த அந்த செயலால் சாய்ந்தமருதுக்கு ஏற்படும் தீமைகள்

1. நமது கிராமம் உண்டான காலத்திலிருந்த நிலப்பரப்புக் குறைக்கப்பட்டு, வடக்குப்பக்க எல்லையும் மாற்றி அமைக்கப்படுகிறது.

2. எதிர்காலத்தில் சாய்ந்தமருதுக்குத் தனியான பிரதேசசபை ஒன்றை அமைப்ப தற்குத் தேவையான நிலப்பரப்பை எமது கிராமம் இழந்துவிடும்.

3. சாய்ந்தமருதூரின் மேற்கு எல்லையிலுள்ள இறைவெளிக்கண்ட வயல் நிலங் களின் பரிபாலனம் சாய்ந்தமருது கமநல சேவை நிலையத்தின் பரிபாலனத்தி லிருந்து விடுபடுகிறது.

4. சாய்ந்தமருதின் எதிர்கால வளர்ச்சிக்குப் பெரும் தடை ஏற்பட்டுவிடும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

## எமது ஆட்சேபனை

1. 1987ஆம் ஆண்டில் சாய்ந்தமருதுக் கிராமத்தின் வடக்குப்பக்கத்திலுள்ள ஒரு பகுதியை மிக இரகசியமாகவும் மனிதாபிமானமற்ற முறையிலும் கல்முனைக்குடியோடு சேர்த்துக் கொண்டமைக்கும்.

2. இதனோடு சேர்த்து ஒழுங்கற்ற நிலையில் கல்முனைக்குடியின் தெற்கு எல்லை உள்ளதெனக் கூறி அதனைச் சீராக்கல், நேராக்கல் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்வையில் தற்போது சாய்ந்தமருதின், பிரதான வீதிக்கு மேற்கே உள்ள ஒரு பகுதியைக் கல்முனைக்குடியோடு சேர்த்துக் கொள்ள எடுக்கப்படும் எல்லா வகையான முயற்சிகளுக்கும் எமது முழுமையான ஆட்சேபனைகளையும், எதிர்ப்பையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## எமது வேண்டுகோள்

இரு கிராமங்களினதும் சமாதான சகவாழ்வுக்கும் சுமுகமான பரஸ்பர நல்லுறவுக்கும் பங்கமேற்படாதிருக்க, வருங்கால மக்களின் நலன்கருதி 1987ஆம் ஆண்டில் சாய்ந்தமருதுக் கிராமத்துக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் களைந்து, கல்முனைக்குடி கே.பீ/54உடன் சேர்க்கப்பட்ட பகுதியை மீளவும் சாய்ந்தமருதுடன் இணைத்து, சாய்ந்தமருதின் 1986ஆம் ஆண்டிலிருந்த வடக்கு எல்லையைத் தொடர்ந்தும் பேண தங்களாலான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென சகல நல்லெண்ணம் படைத்த அரசியல்வாதிகள், நிர்வாக உத்தியோகத்தர்கள், கல்விமான்கள், நலன்விரும்பிகள், பொதுமக்கள் அனைவரையும் வேண்டிக் கொள்கிறோம்.

## பின்னிணைப்புகள்

1. **1986ஆம் ஆண்டின் கல்முனைத் தேர்தல் தொகுதி வாக்காளர் இடாப்பு**
2. **அரசாங்க வர்த்தமானி இல. 195 (1975 - 12 - 19)**
3. **கல்முனைப் பிரதேசசபைக் கூட்டடறிக்கை**

இப்பிரசுரம் சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் மரைக்காயர் சபையினால் 1997 – 09 – 01ஆம் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1986ஆம் ஆண்டின் கல்முனைத் தேர்தல்தொகுதி
## வாக்காளர் இடாப்பு

1986 13 / இ / 14

இல. 53 சாய்ந்தமருது (தமிழ்ப்பிரிவு) கி. சே. நி. பிரிவு,
சாய்ந்தமருது (தமிழ்ப்பிரிவு) கிராமம்

| | | | |
|---|---|---|---|
| 1 | அலிஉதுமாலெவ்வை முகம்மதுசம்சுதீன் | ஆ | 1327 |
| | சம்சுதீன் பாத்திமாசுகறா | பெ | 1328 |
| | அஸ்கர் சம்சுதீன் | ஆ | 1329 |
| | சம்சுதீன் றோவினா | பெ | 1330 |
| 1ஏ | சாய்ப்புத்தம்பிலெவ்வை முகம்மதுகாலிட் | ஆ | 1331 |
| | சம்சுதீன் றிஹானா | பெ | 1332 |
| 2 | முகம்மதுஇப்றாகீம் முகம்மதுசாகிர் | ஆ | 1333 |
| | அலிஉதுமாலெவ்வை ஆயிசா | பெ | 1334 |
| | மீராலெவ்வை அவ்வாஉம்மா | பெ | 1335 |
| 8 | முகம்மதுஇப்றாலெவ்வை றாவியாஉம்மா | பெ | 1336 |
| | உதுமாலெவ்வை அபூபக்கர் | ஆ | 1337 |
| | உதுமாலெவ்வை முகம்மதுபாருக் | ஆ | 1338 |
| | உதுமாலெவ்வை முத்துமுகம்மது | ஆ | 1339 |
| 8ஏ | ஆதம்பாவா முகம்மதுஇப்றாகீம் | ஆ | 1340 |
| | உதுமாலெவ்வை ஆயிசாஉம்மா | பெ | 1341 |
| 9 | அப்துல்மஜிது முகம்மதுஇப்றாகீம் | ஆ | 1342 |
| | உதுமாலெவ்வை ஆமினாஉம்மா | பெ | 1343 |
| 10 | முகம்மதுஹுசைன் முகம்மதுஇப்றாகீம் | ஆ | 1344 |
| | முகம்மதுஇப்றாகீம் ஹாஜராஉம்மா | பெ | 1345 |
| | முகம்மதுஹுசைன் தௌபீக்கரீம் | ஆ | 1346 |
| | முகம்மதுஹுசைன் உம்முறபிக்கா | பெ | 1347 |
| | முகம்மதுஹுசைன் முகம்மதுபதுறுதீன் | ஆ | 1348 |
| | முகம்மதுஹுசைன் உம்முஹபிபா | பெ | 1349 |
| | முகம்மதுஹுசைன் உம்முஹனினா | பெ | 1350 |
| 11 | மீராசாய்பு அகமதுலெவ்வை | ஆ | 1351 |
| | முகம்மதுஅலியார் லத்திபா | பெ | 1352 |
| | அகமதுலெவ்வை சாறாஉம்மா | பெ | 1353 |
| 11ஏ | உதுமாலெவ்வை லெய்லாபீவி | பெ | 1354 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1986 13 / இ / 14
சாய்ந்தமருது (தமிழ்பிரிவு) கிராமம்

| | | | |
|---|---|---|---|
| 12 | உதுமாலெவ்வை சாறாஉம்மா | பெ | 1355 |
| | மீராமுகையதீன் அலிகுறா | பெ | 1356 |
| 12ஏ | கலந்தர் உதுமாலெவ்வை | ஆ | 1357 |
| | உதுமானாச்சி ஆதம்பாவா | பெ | 1358 |
| | முகம்மதுஇப்றாகீம் அயாத்துமுகம்மது | ஆ | 1359 |
| | இப்றாலெவ்வை பௌசியா | பெ | 1360 |
| 12பி | முகம்மதுஇப்றாகீம் உம்முகைபாஉம்மா | பெ | 1361 |
| | முகம்மதுஇஸ்மாயில் சீனிக்கண்டு | ஆ | 1362 |
| 16 | செய்யதுஅகமது அசனார் | ஆ | 1363 |
| | தம்பிராசா அவ்வாஉம்மா | பெ | 1364 |
| 16ஏ | உதுமாலெவ்வை தம்பிராசா | ஆ | 1365 |
| | முகம்மதுஇஸ்மாயில் மரியம்கண்டு | பெ | 1366 |
| | தம்பிராசா சம்சுதீன் | ஆ | 1367 |
| 20 | ஆதம்பாவா சுலைமாலெவ்வை | ஆ | 1368 |
| | அலியார் சரிபாஉம்மா | பெ | 1369 |
| | சுலைமாலெவ்வை அப்துல்ஜப்பார் | ஆ | 1370 |
| | சுலைமாலெவ்வை முகம்மதுஅபூபக்கர் | ஆ | 1371 |
| | சுலைமாலெவ்வை முகம்மதுஇப்றாகீம் | ஆ | 1372 |
| | சுலைமாலெவ்வை முகம்மதுஹனிபா | ஆ | 1373 |
| 20ஏ | முகம்மதுஇஸ்மாயில் ஆதம்பாவா | ஆ | 1374 |
| | சுலைமாலெவ்வை றகுமத்துநாச்சி | பெ | 1375 |
| | பக்கீர்தம்பி சாறாஉம்மா | பெ | 1376 |
| 21 | அகமதுலெவ்வை முகம்மதுகாசீம்பாவா | ஆ | 1377 |
| | முகம்மதுலெவ்வை முக்குலத்தும்மா | பெ | 1378 |
| | அகமதுலெவ்வை உதுமாலெவ்வை | ஆ | 1379 |
| 21ஏ | இஸ்மாலெவ்வை ஆதம்பாவா | ஆ | 1380 |
| | அகமதுலெவ்வை சாறாஉம்மா | பெ | 1381 |
| 21பி | அலியார் தம்பிராசா | ஆ | 1382 |
| | அகமதுலெவ்வை மரியம்நாச்சி | பெ | 1383 |
| 21சி | அப்துல்ஜப்பார் தம்பிராசா | ஆ | 1384 |
| | அகமதுலெவ்வை அவ்வாஉம்மா | பெ | 1385 |
| 22 | ஆதம்பாவா முகம்மதுஇஸ்மாயில் | ஆ | 1386 |
| | சீனிமுகம்மது நிக்மத்து | பெ | 1387 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | முகம்மதுஇஸ்மாயில் பௌத்துன்னிசா | பெ | 1388 |
| | முகம்மதுஇஸ்மாயில் நளீம் | ஆ | 1389 |
| | முகம்மதுஇஸ்மாயில் றியால் | ஆ | 1390 |
| 22ஏ | அபூபக்கர் சுலைகாஉம்மா | பெ | 1391 |
| | முகம்மதுஇஸ்மாயில் பாத்தும்மா | பெ | 1392 |
| | மீராலெவ்வை ஆதம்பாவா | ஆ | 1393 |
| 26 | மாலொக்குகே சைமன் | ஆ | 1394 |
| | எதிரிசிங்க தேவலாகே ரூபாவதி | பெ | 1395 |
| 48 | முகம்மதுகாசீம் அகமது | ஆ | 1396 |
| | சேகுலெவ்வை செய்யதுநாச்சி | பெ | 1397 |
| | ஆதம்லெவ்வை முகம்மதுஜிப்ரி | ஆ | 1398 |
| | அகமது ஜிக்கான் | ஆ | 1399 |
| | அகமது சப்ரியா | பெ | 1400 |
| | மீராமுகையதீன் முகம்மதுமுஸ்தபா | ஆ | 1401 |
| 48ஏ | முகம்மதுமுகையதீன் சிக்கந்தர் | ஆ | 1402 |
| | அகமது ஜனூன் | பெ | 1403 |
| 49 | உதுமாலெவ்வை சீனிமுகம்மது | ஆ | 1404 |
| | ஆதம்பாவா இம்மாத்தும்மா | பெ | 1405 |
| | சீனிமுகம்மது முகம்மதுஆலிம் | ஆ | 1406 |
| | சீனிமுகம்மது முகம்மதுஆரிப் | ஆ | 1407 |
| | சீனிமுகம்மது முகம்மதுஅஸ்ரப் | ஆ | 1408 |
| | சீனிமுகம்மது முகம்மதுஅன்வர் | ஆ | 1409 |
| 49ஏ | சீனிமுகம்மது முகம்மதுஹம்சா | ஆ | 1410 |
| | சின்னலெவ்வை ஜனுல்பர்சானா | பெ | 1411 |
| 50 | இலெட்சுமணன் சிறினிவாசன் | ஆ | 1412 |
| | சிறினிவாசன் ஜெயசிறி | பெ | 1413 |
| 53 | ஆதம்பாவா சீனிமுகம்மது | ஆ | 1414 |
| | முகம்மதுஹனிபா லத்திபா | பெ | 1415 |
| 54 | ஆதம்பாவா முகம்மதுமஜிது | ஆ | 1416 |
| | இப்றாகீம் பரிதா | பெ | 1417 |
| | முகம்மதுமஜிது றெகானா | பெ | 1418 |
| | முகம்மதுமஜிது முகம்மதுறிஸ்வி | ஆ | 1419 |
| | முகம்மதுமஜிது முகம்மதுநௌபல் | ஆ | 1420 |
| | முகம்மதுஅலி வதூத் | ஆ | 1421 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய்ந்தமருது (தமிழ்பிரிவு) கிராமம்

| | | | |
|---|---|---|---|
| 55 | சீனிமுகம்மது முகம்மதுதம்பி | ஆ | 1422 |
| | காசீம்பாவா அவ்வாஉம்மா | பெ | 1423 |
| | சீனிமுகம்மது ஆதம்பாவா | ஆ | 1424 |
| | சீனிமுகம்மது அவ்வாஉம்மா | பெ | 1425 |
| | சீனிமுகம்மது சின்னத்துரை | ஆ | 1426 |
| | சீனிமுகம்மது மீராசாய்பு | ஆ | 1427 |
| 56 | சேகுஇஸ்மாயில் அகமதுலெவ்வை | ஆ | 1428 |
| | அகமதுலெவ்வை பாத்தும்மா | பெ | 1429 |
| 84 | மீராசாய்பு சுலைமாலெவ்வை | ஆ | 1430 |
| | உதுமாலெவ்வை கதிஜாஉம்மா | பெ | 1431 |
| | சுலைமாலெவ்வை ராசிக் | ஆ | 1432 |
| | சுலைமாலெவ்வை உதுமானாச்சி | பெ | 1433 |
| | சுலைமாலெவ்வை சித்திபரிதா | பெ | 1434 |
| | ஆதம்பாவா மீராசாய்பு | ஆ | 1435 |
| 85 | உதுமாலெவ்வை இஸ்மாலெவ்வை | ஆ | 1436 |
| | உதுமாலெவ்வை இளையபிள்ளை | பெ | 1437 |
| 86 | முகம்மதுஇஸ்மாயில் முகம்மதுசலிம் | ஆ | 1438 |
| | முகம்மதுசலிம் பீவி பாத்தும்மா | பெ | 1439 |
| 92ஏ | உதுமாலெவ்வை முகம்மதுஇஸ்மாயில் | ஆ | 1440 |
| | இப்றாலெவ்வை இராசம்மா | பெ | 1441 |
| | உதுமாலெவ்வை சுலைமாலெவ்வை | ஆ | 1442 |
| | உதுமாலெவ்வை அப்துல்லத்திப் | ஆ | 1443 |
| | உதுமாலெவ்வை முனையிர் | ஆ | 1444 |
| 93 | அகமதுலெவ்வை அலிமாக்கண்டு | பெ | 1445 |
| | சுலைமாலெவ்வை அப்துல்மஜிது | ஆ | 1446 |
| 94ஏ | சேகுமுகையதீன் அப்துல்கபூர் | ஆ | 1447 |
| | உதுமாலெவ்வை வெள்ளையும்மா | பெ | 1448 |
| 95 | உதுமாலெவ்வை குழந்தையும்மா | பெ | 1449 |
| | முகையதீன் ஆமினாஉம்மா | பெ | 1450 |
| | அகமதுலெவ்வை ஆதம்பாவா | ஆ | 1451 |
| 95ஏ | உதுமாலெவ்வை மீராமுகையதீன் | ஆ | 1452 |
| | முகையதீன் கதிஜாஉம்மா | பெ | 1453 |
| | மீராமுகையதீன் முகம்மதுஹனிபா | ஆ | 1454 |
| | மீராமுகையதீன் அப்துல்கரீம் | ஆ | 1455 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் ஜனாப். எம். எம். எம். ஜெமீல்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஜனாப். ஐ. எல். அப்துல் அஸீஸ்

கௌரவ உறுப்பினர் ஜனாப். எம். எம். எம். ஜெமீல்

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர்களே, சபையில் என்னால் முன்மொழியப்பட்ட பிரேரணை ஏன் கொண்டுவரப்பட்டதென்றால், கல்முனைக்குடி கிராமத்திற்கும் சாய்ந்தமருது கிராமத்திற்கும் இடையில் எல்லையாக ஸாஹிறாக் கல்லூரி வீதி அமைந்துள்ளதை நாம் அனைவரும் அறிவோம். அப்படி இருக்கும் போது கல்முனைக்குடியின் ஒரு பகுதி சாய்ந்த மருது கிராமசேவகர் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது. இதனை நினைத்து நான் கவலையடைகின்றேன். இந்தப் பிரேரணையில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் வாழும் மக்கள் நிருவாகக் கடமைகளை மேற்கொள்ளும் போது, கல்முனைக்குடி 13ம், 14ம் பிரிவின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டிய மக்கள், சாய்ந்தமருது கிராமசேவகர் பிரிவின் கீழ் உள்ளடக்கப்பட்டு அக்கிராமசேவகரைத் தேடி அலைவதால், இம்மக்களுக்கு சில அரச கருமங்களைச் செய்வதில் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அதன் காரணமாக இந்தக் குடியிருப்பு பகுதிகளைச் சீராக்குதல் என்ற முறையில் மக்களின் நன்மைக்காக கல்முனைக்குடி கிராமசேவகர் பிரிவு ஒன்றுடன் உடனடியாக இணைக்க வேண்டும் என்று இந்த சபை உரிய அதிகாரிகளைக் கோர வேண்டும். இதனால் எந்த விதமான கிராமரீதியான பிரச்சினைகளோ, அல்லது வேறு விதமான பிரச்சினைகளோ எழுவதற்கு இடமில்லை. என்பது தெளிவு, இந்தப் பகுதி கல்முனைக்குடி 13ம், 14ம் பிரிவுக்கு நேராக இருப்பதால் எந்தவித பிரச்சினைகளும் எழ முடியாது. இப்பிரேரணையை நமது சபை ஏகமனதாக நிறைவேற்றி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

கௌரவ உறுப்பினர் ஜனாப். ஐ. எல். அப்துல் அஸீஸ்

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர்களே, கௌரவ உறுப்பினர் ஜமீல் அவர்களினால் முன்மொழியப்பட்ட பிரேரணை தொடர்பாக கடந்த ஜுலை மாதம் வாக்காளர் இடாப்பு பதிவு செய்யப்பட்ட போது, உரிய கிராமசேவகர்களை நாடி உத்தியோகப்பற்றற்ற முறையில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள் என்று கூறினேன். அதற்கு அவர்கள் மேலதிகாரியின் உத்தரவு இல்லாமல் எதுவும் செய்ய முடியாது என்று கூறினார்கள். இந்த விடயம் பற்றி நமது சபையின் துணைத்தவிசாளருக்கும் தெரியும். இது நிருவாகச் சிக்கலானதொரு விடயம். கௌரவ உறுப்பினர் ஜமீல் அவர்களின் பிரேரணையில் இன்னொரு விடயம் சுட்டிக்காட்டப்படல் வேண்டும். இந்தப் பிரேரணையில் காட்டப்பட்டுள்ள நிருவாகச் சிக்கல் என்பது பூகோள ரீதியான பிரச்சினையாகும். அடுத்து கல்முனைப் பிரதேச சபைக்குட்பட்டதாக கல்முனை உபஅலுவலகப் பிரிவும் சாய்ந்தமருது உப அலுலகப் பிரிவும் உண்டு. இங்கு கௌரவ உறுப்பினர் ஜமீல் அவர்களினால் சுட்டிக்காட்டப்பட்ட பிரிவு, கல்முனை உபஅலுவலகத்துடன் சேர்க்கப்பட வேண்டியது. ஆனால் தற்பொழுது அப்பகுதியிலிருந்து கிடைக்கும் வருமானங்கள் அனைத்தும் சாய்ந்தமருது உபஅலுவலகப் பிரிவுடன் சேர்க்கப்பகின்றன. எனவே பிரதேச செயலகத்துடன் தொடர்புடைய விடயங்கள் தாமதமானாலும், பிரதேச சபையுடன் தொடர்புடைய வேலைகளை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். எனவே இந்த விடயத்தையும் கவனத்திற் கொண்டு பிரேரணையில் திருத்தம் செய்ய வேண்டும். பிரதேச சபைரீதியான பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டால் பிரதேச செயலகத் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காண்பது சுலபமானதாகும். இவ்விடயம் பிரச்சினையை ஏற்படுத்தக்கூடிய விடயமல்ல பூகோள ரீதியான சிக்கலைக் குறைப்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ துணைத்தவிசாளர்

உண்மையாகவே ஒவ்வொரு ஊர் ரீதியான எல்லைகளும், அந்தந்த ஊர்களுடன் சேர்க்கப்பட வேண்டியது அவசியம். உதாரணமாக சாய்ந்தமருது எல்லைக்குள் ஸாஹிறாக் கல்லூரி அமைந்திருக்கின்றது. அதனால் அதன் விலாசம் சாய்ந்தமருது ஸாஹிறாக் கல்லூரி என மாற்றப்பட்டுள்ளது. அது நியாயமானது. ஒவ்வொரு ஊருக்குள்ளும் இருக்கும் பாடசாலைகள், நிறுவனங்கள் அந்தந்த எல்லைக்குள் மாற்றப்படுவது அவசியம். இந்தடிப்படையிலேயே பிரதேச நிருவாக சீராக்கல் கமிசன் ஒன்று நடைபெறுகின்றது. அந்தக் கமிசனுக்கு ஒவ்வொரு ஊர் ரீதியாக கிராமசேவகர் மட்டக் கருத்துக்களை பொதுமக்கள், பொது நிறுவனங்கள் வாயிலாக கேட்டிருந்தார்கள். அதற்கமைய அதனை நாங்கள் தொகுத்து அனுப்பி இருக்கின்றோம். அதில் கூட இங்கு குறிப்பிடப்பட்ட இடம் கல்முனைக்குடிக்குள் இருப்பதனால் அதனைக் கல்முனைக்குடி 14ம் பிரிவுடன் சேர்க்க வேண்டும் என்று கேட்டுள்ளோம். நாங்கள் பிரித்த எல்லைகளில் கல்முனைக்குடி மொத்தம் 17 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதில் 17வது பிரிவுடன் இந்த இடம் சேர்க்கப்பட்டுள்ளது. இங்கு கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணை உண்மையாக நிருவாகத்திற்குள் உள்ள ஒரு பெரும் பிரச்சினையாகும். இந்தப் பிரிவை கல்முனைக்குடி 17ம் குறிச்சியுடன் சேர்க்க வேண்டும் என்று எம்மால் அனுப்பப்பட்ட கோவை ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கான வேலைகள்நடைபெறுமென நினைக்கின்றேன். இருந்த போதும் இங்கு குறிப்பிடும் இந்த இடம் கல்முனைக்குடியுடன் சேர்க்கப்பட வேண்டிய ஒரு இடமாகும்.

கௌரவ உறுப்பினர் ஜனாப். எஸ். எம். எம். றபீக்

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த விடயத்தில் நான் மிகவும் நிதானத்துடன் நடந்துகொள்ளவேண்டிய பொறுப்புள்ளவனாக இருக்கின்றேன். இது தொடர்பாக சாய்ந்தமருது மக்களின் நிலைப்பாடு என்னவென்பது தெரியாது. இருந்தபோதும் கல்முனைப் பிரதேச சபையில் சாய்ந்தமருது மட்டுமல்ல, கல்முனைக்குடி மட்டுமல்ல, மருதமுனை மட்டுமல்ல, நற்பிட்டிமுனை மட்டுமல்ல எல்லாம் ஒன்று சேர்ந்த சபைதான் கல்முனைப் பிரதேச சபையாகும். எனவே மேற்குறிப்பிட்ட விடயம் கல்முனைக்குடி வருமானத்தைக் குறைக்கின்றதென்றால் அதனை நான் சற்று தெளிவாக்க விரும்புகிறேன். சாய்ந்தமருது உபஅலுவலகம் என்றாலும் அது கல்முனைப் பிரதேச சபைக்குள்தான் இருக்கின்றது. இன்றைய கால கட்டத்தில் நமது சபை நகர சபையாக மாறக்கூடிய காலகட்டத்தில் இருப்பதால், இந்த விடயத்தை பிற்படுத்தி ஆய்வு செய்யலாம் என்று நினைக்கின்றேன்.

கௌரவ உறுப்பினர் ஜனாப். எம். எச். எம். சுபைர்

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் ஜமீல் அவர்களினால் கொண்டு வரப்பட்ட பிரேரணை சாய்ந்தமருதுடன் இணைந்திருக்கின்ற ஒரு பகுதியை கல்முனைக்குடியுடன் சேர்த்து நிருவாகத்தைச் சீர்செய்யலாம் என்பதாகும். நாம் இந்த சபையில் இருந்து செய்யும் ஒரு காரணத்தினால் ஒரு கிராம மக்களின் மனம் வேதனை அடையும், என்றால் அது இச்சபையையேசாரும். எனவே நானும் இந்த சபையில் இருப்பவன் என்ற ரீதியில் சிந்திக்கின்றேன். அந்தப் பிரதேசத்தைச் சார்ந்த கௌரவ உறுப்பினர் இந்த சபையில் இருப்பதால், அவரிடத்தில் மக்கள் கேள்விக்கணை தொடுக்க முடியும். நாம் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் வெளியில் நின்று கேள்வி கேட்கும் மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு உறுப்பினருக்கும் உண்டு. இது இவ்வாறுதான் நடைபெற்றது. இப்படியான நிருவாகச் சிக்கல் இருக்கிறது என்ற விளக்கத்தை நாங்கள் கொடுக்கலாம். அவ்வாறு கொடுப்பதாக இருந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 95பி | முகம்மதுராசா அலியார் | ஆ | 1456 |
| | முகையதீன்பாவா அவ்வாஉம்மா | பெ | 1457 |
| 95சி | நெயினாமுகம்மது சாகுல்ஹமிது | ஆ | 1458 |
| | முகையதீன்பாவா சீனத்தும்மா | பெ | 1459 |
| 95/1 | குழந்தையர் முகம்மதுசரிபு | ஆ | 1460 |
| | முகையதீன்பாவா சுலைகாஉம்மா | பெ | 1461 |
| | முகம்மதுசரிபு அப்துல்றசிது | ஆ | 1462 |
| 95/2 | முகம்மதுகாசீம் முகம்மதுபாரூக் | ஆ | 1463 |
| | முகம்மதுசரிப் முர்சலின் | பெ | 1464 |
| 96 | அலியார் உதுமாநாச்சி | பெ | 1465 |
| | மீராசாகிபு சாறாஉம்மா | பெ | 1466 |
| | மீராசாகிபு சுலைமாலெவ்வை | ஆ | 1467 |
| | மீராசாகிபு முபாறக் | ஆ | 1468 |
| 96ஏ | இஸ்மாலெவ்வை ஆதம்பாவா | ஆ | 1469 |
| | மீராசாகிபு செய்னம்பு | பெ | 1470 |
| 97 | மீராசாகிபு சதக்குலெவ்வை | ஆ | 1471 |
| | மீராசாகிபு செமிலத்தும்மா | பெ | 1472 |
| | சதக்குலெவ்வை ஜுவைரியா | பெ | 1473 |
| | சதக்குலெவ்வை பரிதாஉம்மா | பெ | 1474 |

மொத்தம் : 1474

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனைப் பிரதேச சபைக் கூட்டறிக்கை

## 04 - 09 - 1996ந் திகதி நடைபெற்ற கல்முனைப் பிரதேச சபையின் (29 - 08 - 96ந் திகதிய கூட்டத் தொடர்) கூட்டக் குறிப்பு

கல்முனைப் பிரதேச சபையின் கூட்டத் தொடர் 04 - 09 - 96ந் திகதி புதன் கிழமை காலை 9.00 மணிக்கு கௌரவ துணைத்தவிசாளர் ஜனாப். கே. எம். அப்துர்ரஸ்ஸாக் அவர்களின் தலைமையில் பிரதேச சபையின் சபாமண்டபத்தில் ஆரம்பமானது.

### சமுகமளித்தோர்

கௌரவ உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 01. ஜனாப். கே. எம். அப்துர்ரஸ்ஸாக் துணைத்தவிசாளர் | சி. ல. மு. கா. |
| 02. ஜனாப். எஸ். எல். எம். றபீக் | சி. ல. மு. கா. |
| 03. ஜனாப். எஸ். எம். எம். றபீக் | சி. ல. மு. கா. |
| 04. ஜனாப். ஐ. எல். அப்துல் அஸீஸ் | சி. ல. மு. கா. |
| 05. ஜனாப். எம். எச். எம். சுபைர் | ஐ. தே. க. |
| 06. ஜனாப். எப். எம். அமீறுல் அன்சார் | ஐ. தே. க. |
| 07. ஜனாப். ஏ. ஏ. கபூர் | ஐ. தே. க. |
| 08. ஜனாப். ஏ. எல். பழீல் | ஐ. தே. க. |
| 09. ஜனாப். எம். ஐ. ஜமீல் | ஐ. தே. க. |
| 10. ஜனாப். எம். எம். எம். ஜெமீல் | ஐ. தே. க. |

### சமுகமளிக்காதோர்

கௌரவ உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 01. ஜனாப். ஐ. ஏ. ஹமீட் தவிசாளர் | சி. ல. மு. கா. |
| 02. ஜனாப். எஸ். எச். ஏ. மஜீட் | சி. ல. மு.கா. |
| 03. ஜனாப். எஸ். பீ. எம். இஸ்மாயில் | சி. ல. மு. கா. |
| 04. ஜனாப். ஏ. நசார்டீன் | சி. ல. மு. கா. |
| 05. ஜனாப். எம். ஐ. எம். பிர்தௌஸ் | சி. ல. மு. கா. |
| 06. ஜனாப். யூ. கே. சம்சுத்தீன் | சி. ல. மு. கா. |
| 07. ஜனாப். எஸ். ரீ. கபீர் | ஐ. தே. க. |
| 08. ஜனாப். எஸ். எம். ஹம்ஸா | ஐ. தே. க. |
| 09. திரு. வீ. ஜெயதீசன் | சி. ல. சு. க. |

### கவனஈர்ப்பு பிரேரணை

நிருவாக அமைப்பிற்கு ஒவ்வாத நிலையிலிருக்கும் குடியிருப்புப்பகுதியை சீராக்குதல்

கல்முனைக்குடி 13ம், 14ம், கிராம சேவகர்கள் பிரிவுக்குட்பட வேண்டிய பகுதியான அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியின் மேற்குப் பக்கமாக ஸம்ஸம் அரிசி ஆலைக்கும், சாய்ந்தமருது கிராமப்பக்கமாகவுள்ள கானடி ஒழுங்கைக்கும் இடைப்பட்ட குடியிருப்புக்கள் அமைந்த பகுதியை, உடன் கல்முனைக்குடி 14ம் அல்லது 13ம் கிராம சேவகர்கள் பிரிவிற்குள் அல்லது இதில் ஒரு பிரிவிற்குட்பட்டதாக உத்தியோகபூர்வமாக ஆக்க வேண்டும் எனவும் மேற்குறித்த பகுதிக் குடியிருப்பில் வாழும் மக்களுக்கு நிருவாக சிக்கலைப் போக்குவதோடும், நிருவாக அமைப்பிற்கு ஒவ்வாமல் இருக்கும் குடியிருப்புகளை மேற்கூறியவாறு சீராக்கல் செய்ய வேண்டுமெனவும் இதனை உரிய அரச அதிகாரிகளுக்கு அறிவித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் முன்மொழிகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சபையில் சாதக பாதகங்கள் பேசப்பட்ட பின்புதான் முடிவு எடுக்க வேண்டும். அந்த நிகழ்வின் முன்விளைவுகள், பின்விளைவுகள் என்பவற்றைச் சிந்தித்துத்தான் முடிவெடுக்க வேண்டும். அல்லது அங்கு வாழும் குடும்பங்களின் சம்மதத்தையாவது பெற்ற பின்னர் நாம் இதைச் செய்தால் அவர்களின் விருப்பின் பேரில் செய்யப்பட்டதாகக் கூறலாம். சாய்ந்தமருது உபஅலுவலகத்துடன் இணைந்திருந்த கல்முனைத் தெற்கை, கல்முனை உபஅலுவலகத்துடன் இணைப்பதற்கு இந்த சபை உறுப்பினர்கள் ஆதரவாக இருந்தார்கள் என்று சாய்ந்தமருது மக்கள் கூறுவார்களாயின், அதற்கு சரியானதொரு நியாயம் கூற வேண்டிய பொறுப்பு எங்களுக்குண்டு. எனவே, நான் இந்த விடயத்தில் நடுநிலையாக இருக்கின்றேன்.

கௌரவ உறுப்பினர் ஜனாப். அன்சார் மௌலானா

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர்களே, கல்முனைக் குடியில் வசிக்கும் சில குடும்பங்கள் தங்களுடைய கிராம சேவகர் தொடர்பான விடயங்களையும் அரச அலுவல்கள் தொடர்பான விடயங்களையும் மேற்கொள்ளுவதற்காக அம்மக்கள் சாய்ந்தமருது கிராமத்தை நாடிச் செல்கின்றார்கள், அதே நேரம் பூகோள ரீதியாக கல்முனைக்குடிக்குரிய நிலப்பரப்பு சாய்ந்தமருது கிராமத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இருந்தபோதும் மிக நீண்ட காலமாக இந்தப் பிரதேசம் சாய்ந்தமருதுக் கிராமத்துடன் இணைக்கப்பட்டிருந்தமை யாவரும் அறிந்த விடயம். நாம் மக்களுக்காக நிருவாகச் சிக்கலை விடுவிக்க முனைகின்றோம் என்பதை ஏற்றுக்கொண்டாலும், இதனை நாம் இப்பொழுது தீர்மானமாக நிறைவு செய்யாமல் சாய்ந்தமருது கிராமத்தின் அனைத்து உறுப்பினர்களையும், பிரதேச செயலாளரையும் கலந்தாலோசித்த பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கலாம். அதுவரை இதனை கொள்கை அளவில் ஏற்றுக் கொள்வோம்.

கௌரவ உறுப்பினர் ஜனாப். எஸ். எம். எம். றபீக்

கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் இன்று சபைக்கு தலைமை தாங்கிக் கொண்டு சபையை வழிநடாத்துகின்றீர்கள், எனவே இன்றைய அமர்வில் இதனைத் தீர்மானிக்காமல் தவிசாளர் அவர்கள் தலைமை தாங்கும் கூட்டமொன்றில் இது பற்றி விவாதிப்பது நல்லதென்று நினைக்கின்றேன். அந்தப் பிரதேசத்தில் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை 07 ஆகவிருந்தாலும் இன்றைய காலகட்டத்தில் அதனைச் செய்வது என்னைப் பொறுத்தவரை பொருத்தமாக அமையவில்லை. நிருவாகச் சிக்கலாக இருந்தாலும் சாய்ந்தமருது, கல்முனைக்குடி இரண்டுக்கும் பிரதேச செயலகம் ஒன்றுதான். ஆனால் நிருவாகச் சிக்கல் என்னவெனில், இப்பகுதியின் பிரதேச செயலகத் தொடர்பு சாய்ந்தமருதுக்கூடாகச் செல்கின்றது. அத்தொடர்பு பெரியளவிற்கு இல்லை. அப்பகுதி மக்களின் கிராமசேவகர் அதே வீதியில் தான் இருக்கின்றார், எனவே நான் மேலும் கூறுவது என்னவெனில் இந்த விடயம் இந்தக் காலகட்டத்தில் பொருத்தமற்றது. அத்துடன் துணைத்தவிசாளர் தலைமை தாங்கும் இன்றைய அமர்வில் இது பற்றி ஆய்வு செய்து முடிக்காமல் தவிசாளர் தலைமை தாங்கும் வேறொரு கூட்டத்தில் இது பற்றி ஆராய்வது சிறந்ததாகும்.

கௌரவ உறுப்பினர் ஜனாப். எம். எம். எம். ஜமீல்

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்தப் பிரேரணை சட்ட ரீதியாக முறையாகக் கொடுக்கப்பட்ட பிரேரணையாகும். கடந்த 29 - 08 - 96ம் திகதி இது எடுக்கப்படாமைக்கான காரணமாக தவிசாளர் அவர்கள் கூறியது, நேரம் போதாமை என்பதாகும். எனவே எனது இந்தப் பிரேரணையையும், கௌரவ துணைத்தவிசாளரின் பிரேரணையும் அடுத்த அமர்வில் கவனயீர்ப்புப் பிரேரணையாக எடுத்துக் கொள்ளப்படும் என்று தவிசாளரினால் அறிவிக்கப்பட்டது. முறையாக பாரம்பரிய மரபோடு இந்த சபை கூடியபோது இன்று இந்த இரண்டு பிரேரணைகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனயீர்ப்பு பிரேரணையாக எடுத்துக்கொள்வதா அல்லது வேறொரு கூட்டத்தில் எடுத்துக்கொள்வதா? என்ற வினா சபைக்கு விடப்பட்டது. அதனை சபை ஏற்றுக்கொண்டபின்னர்தான் முதலில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டு விவாதங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் கௌரவ உறுப்பினர் றபீக் அவர்கள் கூறிய கூற்றை நான் மறுக்கின்றேன். ஏனெனில் முறையாக முன்மொழியப்பட்ட பிரேரணையை தவிசாளர் என்ற ஸ்தானத்தில் இருக்கும் துணைத்தவிசாளரைப் பார்த்து தாங்கள் தலைமை தாங்கும் இன்றைய கூட்டத்தில் இதைப்பற்றி விவாதிக்கக்கூடாது என்றதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. இங்கே இந்த சபையில் கௌரவ தவிசாளராக, கௌரவ தவிசாளர்தான் இருக்கவேண்டும் என்ற நியதி இல்லை. தவிசாளர் இல்லாதவேளையில் தவிசாளரின் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத்தான் பிரதேசசபைச் சட்டத்தில் துணைத்தவிசாளர் என்றொருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அப்படிப்பட்ட துணைத்தவிசாளர் இன்று இந்த சபையை வழிநடாத்துவது சட்டப்படி சரி என்று நாங்கள் பரிபூரணமாக நம்புகின்றோம். அப்படியான தவிசாளரின் தலைமையில் இன்று கூட்டம் நடைபெறும்போது குறித்த விடயம் காரணமாக எடுக்க வேண்டிய தீர்மானத்தை இன்று நிறைவு செய்யாமல், கௌரவ தவிசாளர் ஜனாப். ஐ. ஏ. ஹமீட் அவர்கள் தலைமை தாங்கும் இனிவரும் கூட்டங்களில் எடுக்குமாறும் கூறிய அறிவுரையை நான் இந்த சபையில் ஏற்றுக்கொள்ளவில்லை. நாங்கள் இங்கே கருதுவது கிராம ரீதியாகவல்ல நாம் அனைவரும் கல்முனைப் பிரதேச சபையின் உறுப்பினர்கள் என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இரண்டாவதாகத்தான் நாங்கள் வாழும் பகுதியைச் சார்ந்தவர்கள் என்பதை நினைக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட பகுதியை எனது தொழில் ரீதியாக நான் கையாண்டிருக்கின்றேன். அப்பகுதி பூகோள ரீதியான நிருவாக சிக்கல்கள் ஏற்படுத்துகின்ற ஒரு பகுதியாக இருக்கின்றது. எனவே இதற்கான தீர்வு காணப்படல் வேண்டும் என்ற நோக்கோடு கொண்டுவரப்பட்டது. எனவே இதே சபையில் நான் கொண்டு வந்த வடிவில் அந்தப் பிரேரணையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கௌரவ துணைத்தவிசாளர்

கௌரவ உறுப்பினர் றபீக் அவர்கள் கூறிய தெளிவுரை சபைக்கொரு விளக்கமாகவிருந்தாலும் இன்று இந்த ஆசனத்திலிருந்து தலைமை தாங்கிக்கொண்டு இருக்கும் நான் சபையின் அனைத்து தத்துவங்களையும் அறிந்தவனாக இருக்கின்றேன்.

இந்த விடயத்தைக் கவனயீர்ப்பு பிரேரணையாக எடுத்துக்கொள்வதற்கு முன்னர் இதில் ஏதும் சிக்கல்கள் இருக்கின்றதா என்று அறிவதற்காகத்தான் இரண்டு கவனயீர்ப்பு பிரேரணைகளையும் சபையில் நான் வாசித்துக்காட்டி இதைக் கவனயீர்ப்புப் பிரேரணையாக நாங்கள் எடுத்துக்கொள்வோமா? அல்லது தவிசாளர் வந்த பின்னர் ஒரு பொதுக்கூட்டத்தில் இதை எடுத்துக்கொள்வதா? என்ற சபையின் முடிவை அறிய சமர்ப்பித்தேன். சபையில் இருந்தவர்கள் அனைவரும் ஏகமனதாக இந்த இரண்டு பிரேரணைகளையும் கவனயீர்ப்புப் பிரேரணையாக எடுத்துக்கொள்வதென்று கூறியிருக்கிறார்கள் எனவே எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற பொது முடிவின் பின்னர் பிரேரணை முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டு விவாதத்திற்கு விடப்பட்டது. விவாதத்திற்கு விடப்பட்ட நிலையில் பிரேரணையை எக்காரணம் கொண்டும் இன்னொரு தினத்திற்கு ஒத்திவைக்க முடியாது. பிரதேச சபைச் சட்டதிட்டத்தின்படி விவாதிக்கப்பட்ட பிரேரணை வாக்கெடுப்பிற்கு விட்டாவது முடிவு காணப்படல் வேண்டும். விவாதிக்கப்பட்ட பிரேரணை இடைநிறுத்தப்பட்டு அடுத்த கூட்டத்திற்கு ஒத்திவைப்பதென்ற நிகழ்வு பிரதேசசபை சட்டத்தில் இல்லை. அது பாராளுமன்றத்தில் கூட இல்லை. எனவே இன்று எனது நிலை பிரேரணையில் ஒரு முடிவு காணப்படல் வேண்டும்.

இதனை நாம் ஏகமனதாக ஏற்றுக்கொள்வதா அல்லது வாக்கெடுப்பிற்கு விடுவதா? என்பதைச் சபையில் தீர்மானிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் 7ம் பிரிவின் (1) உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கிறேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :-

காணியின் பெயர் :- மகமூத்நகர்.

| காணித்துண்டு இல. | காணியின் விபரம் | உரிமைகோருபவர் | விஸ்தீரணம் ஏ. றூ. பே. |
|---|---|---|---|
| 1. | 15 வயது 11 தென்னை மரங்கள், 15 வயது 2 மா மரங்கள், 1 சீமேந்துக் கிணறு | .. ஆதம்வாவாயாசீன்வாவா தமிழ்க்குறிச்சி, சாய்ந்தமருது | 0 0 15.1 |
| 2. | 15 வயது 11 தென்னை மரங்கள், 3 வயது 16 தென்னை மரங்கள், 10 வயது 1 மாமரம் 10 வயது 1 பனைமரம், 1 சீமேந்துக்கிணறு | .. எம் .ஐ. மொகமட் அசன் | 0 0 12.6 |
| 3. | 15 வயது 2 தென்னை மரங்கள் .. .. | .. சீனித்தம்பிநாசுர், தமிழ்குறிச்சி, சாய்ந்தமருது | 0 0 10.8 |
| 4. | 10 வயது 2 மா மரங்கள் .. .. | .. ஏ. சீனிமொகமட், தமிழ்குறிச்சி, சாய்ந்தமருது | 0 0 25.1 |
| 5. | 15 வயது 5 தென்னைமரம் .. .. | .. ஐ. எம். இப்றாகீம், தமிழ்குறிச்சி, சாய்ந்தமருது | 0 0 25.2 |
| 6. | 25 வயது 9 தென்னை .. .. | .. எம். ஐ. உதுமாநாச்சி, தமிழ்குறிச்சி, சாய்ந்தமருது | 0 0 32.0 |
| 7. | 15 வயது 8 தென்னை, 15 வயது 1 மா மரம், 1 சீமேந்து கிணறு | .. ஏ. அத்துல் ஹமீட், தமிழ்குறிச்சி, சாய்ந்தமருது | 0 0 12.8 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 8. | 15 வயது 10 தென்னை, 15 வயது 1 மாதம், 1 சீமேந்துக்கிணறு, 1 தற்காலிககுடிசை | .. சீவித்தம்பி ஆசியாஉம்மா, தமிழ்குறிச்சி, சாய்ந்தமருது | 0 0 14.6 |
| 9. | 15 வயது 6 தென்னை, 15 வயது 1 மாமரம்.. | மொகையின்வாவா விஸ்வதுநாச்சி, தமிழ்குறிச்சி, சாய்ந்தமருது | 0 0 08.6 |
| 10. | 15 வயது 3 தென்னை .. .. | .. எஸ். தங்கரெத்தினம், தமிழ்குறிச்சி, சாய்ந்தமருது | 0 0 08.1 |
| 11. | 15 வயது 3 தென்னை .. .. | .. வீ. சின்னத்தம்பி தமிழ்குறிச்சி, சாய்ந்தமருது | 0 0 16.1 |
| 12. | 15 வயது 21 தென்னை, 15 வயது 2 மாமரம், 15 வயது 1 வேம்பு | .. ஏ. உதுமான்கண்டு தமிழ்குறிச்சி, சாய்ந்தமருது | 0 0 36.6 |
| 13. | 15 வயது 2 தென்னை, 1 தற்காலிககுடிசை,, 1 சீமேந்துக்கிணறு | .. ஏ. சீ. ஆதம்வாவா தமிழ்குறிச்சி, சாய்ந்தமருது | 0 0 13.0 |
| 14. | 15 வயது 5 தென்னை, 1 சீமேந்துக்கிணறு | .. யூனிஸ்லெவ்வை ரசீதும்மா, தமிழ்குறிச்சி, சாய்ந்தமருது | 0 0 09.6 |
| 15. | 10 வயது 1 மா .. .. | .. எஸ். கந்தசாமி தமிழ்குறிச்சி, சாய்ந்தமருது | 0 0 14.2 |
| 16. | 15 வயது 2 தென்னை, 1 தற்காலிககுடிசை, 1 சீமேந்துக்கிணறு | .. எம். ஐ. மொகிதீன்வாவா., தமிழ்குறிச்சி, சாய்ந்தமருது | 0 0 11.8 |
| 17. | 15 வயது 1 தென்னை, 3 தற்காலிககுடிசை, 1 சீமேந்துக்கிணறு | .. முகையதீன்வாவா கதிசாஉம்மா, தமிழ்குறிச்சி, சாய்ந்தமருது | 0 0 14.1 |
| 18. | 15 வயது 11 தென்னை .. .. | .. யூ. எஸ். ஏ. மஜீட், தமிழ்குறிச்சி, சாய்ந்தமருது | 0 0 21.3 |
| 19. | 15 வயது 11 தென்னை, 1 சீமேந்துக்கிணறு .. | .. யூ. எஸ். ஏ. செரிப், தமிழ்குறிச்சி, சாய்ந்தமருது | 0 0 21.1 |
| | | | 2 0 02.8 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 1976 ம் ஆண்டு மாசி மாதம் 25 ந் திகதி மு. ப. 9.00 மணிக்கு கல்முனை பிரிவுக் காரியாதிகாரி காரியாலயத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படி அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1976ம் ஆண்டு மாசி மாதம் 18 ந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்கிறேன்.

டீ. எஸ். பீ. டபிள்யூ. டி. சில்வா.
மேலதிக அரச முகவர்,
அரசாங்க முகவருக்காக
அம்பாறை மாவட்டம்.

கச்சேரி அம்பாறை.
1975ம் ஆண்டு கார்த்திகை மாதம் 26ந் திகதி.

12-573-19.12.75 ந் திகதிய வர்த்தமானி இல. 195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையின் ஏனைய உறுப்பினர்கள் வரவில்லை என்பது சபையின் பிழையல்ல. இன்றைய நாளின் பிழையுமல்ல. அவர்கள் வருகைதர வேண்டியது அவர்களின் கடமையாகும். சரியான முறையில் அழைப்புகள், அறிவிப்புகள் அனுப்பப்பட்டு கூட்டம் தொடங்கியது.

கௌரவ உறுப்பினர் ஜனாப். ஐ. எல். அப்துல் அஸீஸ்

கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த 29 - 08 - 96ம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் இந்தப் பிரேரணைகள் ஆய்வு செய்வதற்கு நேரம் போதியதாக இருக்கவில்லை. எனவே இந்நிகழ்ச்சி நிரலின் ரீதியாக உள்ள நிகழ்ச்சிகளும் கவனயீர்ப்பு பிரேரணைகளும் அடுத்து 04 - 09 - 96ம் திகதி நடைபெறும் கூட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்று தவிசாளர் கூறிய முடிவு, தவிசாளர் தனியாக தனது அறையில் இருந்து எடுத்த முடிவல்ல, அன்று நடைபெற்ற பிரதேசசபையின் மாதாந்த அமர்வில் அனைத்து உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து எடுக்கப்பட்ட முடிவாகும். முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கிணங்க இங்கு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. தவிசாளர் கூறியது போன்று முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டு விவாதம் நடைபெற்ற பின்னர் பிரேரணை ஒத்திவைக்கப்பட முடியாது. இந்த சபையில் இதற்கான தீர்வு காணப்படல் வேண்டும்.

இங்கு குறிப்பிட்ட பகுதியில் மூன்று வகையான சிக்கல்கள் இருக்கின்றன.

1. பிரதேச சபையுடன் தொடர்புடைய நிருவாகச் சிக்கல்.
2. பிரதேச செயலகத்துடன் தொடர்புடைய நிருவாகச் சிக்கல்.
3. கூட்டுறவுச் சங்கத்துடன் தொடர்புடைய நிருவாகச் சிக்கல்.

குறிப்பிட்ட பகுதி கூட்டுறவுச்சங்கம் ரீதியான விடயங்களுக்காக கல்முனை கூட்டுறவுச்சங்க கிளையையே நாடுகின்றது. எனவே இது தொடர்பாக நாங்கள் சென்று கேட்டறிந்து ஒரு உசிதமான முடிவை எடுக்க முடியாது பூகோள ரீதியாக சிந்தித்ததால் இரண்டு சிக்கல்கள் இருக்கின்றன. எனவேதான் இப்பகுதி மக்களை கல்முனைக்குடி 14ம் கிராமசேவகர் பிரிவுடன் சேர்க்க வேண்டும் என்று கொண்டுவரப்பட்டதே தவிர வேறுநோக்குடன் கொண்டுவரப்பட்டதல்ல. மனச்சாட்சியுடன் சிந்தித்து சரியென்று ஏற்றுக்கொண்டால் பிரச்சினை முடிகிறது. இது தீர்க்கப்பட முடியாத வடகிழக்குப் பிரச்சினையல்ல சாதாரணமான பிரச்சினை. இந்த நிலப்பரப்பு எல்லைகளில் ஒரு அடி சாய்ந்தமருதுப் பக்கமாகவும் 9 அடி கல்முனைக்குடிப்பக்கமாகவும் இருக்கின்றது. இந்த விடயத்தை நாங்கள் பிழையாக விளங்கிவிட்டோமானால், ஏதும் அறியாத மக்கள் எவ்வாறு இதைப்பற்றி விளங்குவார்களோ என்ற ஐயம் ஏற்படுகின்றது.

கௌரவ உறுப்பினர் ஜனாப். எஸ். எம். றபீக்

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்தப் பிரேரணை சாய்ந்தமருது கிராமத்துடன் தொடர்புடைய விடயம். இப்பிரேரணை இந்த சபையில் நிறைவு செய்யப்படுமாயின் அதனை நான் முழுமையாக எதிர்க்கின்றேன்.

கௌரவ துணைத்தவிசாளர்

எனது இன்றைய நிலை இப்பிரேரணையை வாக்கெடுப்பிற்கு விடுவதாகும்.

கௌரவ உறுப்பினர் ஜனாப். அன்ஸார் மௌலானா

கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களுக்கு அனுப்பப்பட்ட நிகழ்ச்சி நிரலில் கௌரவ உறுப்பினர் ஜமீல் அவர்களின் பிரேரணை பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. அது பொதுச்சந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான பிரேரணை. ஆனால் அன்றைய அமர்வில் தவிசாளர் அவர்கள் இவ்வாறானதொரு பிரேரணை இருக்கின்றது, அடுத்த கூட்டத்தில் கவனயீர்ப்பு பிரேரணையாக ஏற்றுக்கொள்வதா என்று கேட்டதற்கு சபை ஏற்றுக்கொண்டது. சபையில் முறையாக முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டு விவாதம் நடைபெறும் போது பிரேரணையின் உள்ளடக்கத்தில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. முன்னரே பிரேரணை என்னவென்று யாருக்கும் தெரியாது எனது கருத்து என்னவெனில் பிரேரணையில் திருத்தம் செய்வதற்கு இடம் இருக்கின்றது. எனது திருத்தம் இதனை நாம் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு இதனுடைய சாதக, பாதகங்களை அறிய பிரதேசசபை, பிரதேசசெயலக அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு உபகுழுவை நியமித்து அதற்கான தீர்வைக் கண்ட பின்னர் இறுதி முடிவு காணப்படல் வேண்டும்.

கௌரவ துணைத்தவிசாளர்

சபை கூடிய உடனேயே நான் பிரேரணையை வாசித்துக்காட்டினேன் உள்ளடக்கம் தெரியாதென்று யாரும கூற முடியாது. இந்தப் பிரேரணையில் திருத்தங்களை நாங்கள் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் இன்னுமொரு நாளில் வாக்கெடுப்பிற்கு விடுவது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

கௌரவ உறுப்பினர் ஜனாப். எம். எம். ஜெமீல்

கௌரவ தவிசாளர் அவர்களே. திருத்தத்தை நான் சம்மதிக்கவில்லை. ஏனெனில் இந்தத் திருத்தம் ஒரு பூகம்பமான பிரச்சினையைத் தோற்றுவிக்கலாம். பூகோள ரீதியில் ஒவ்வாத நிலப்பரப்பொன்று இருக்கின்றது. அப்பகுதியை இதற்கு முன்னால் உள்ள கிராமசேவகர் பிரிவுடன் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று ஆலோசனை கூறும் பிரேரணையே ஒழிய அதற்குத் தீர்வுகாண ஒரு குழுவை அமைத்து அதனைச் செய்யுங்கள் என்று பிரதேச செயலாளருக்கு கட்டளையிடும் பிரேரணையாக அதனை நான் கொண்டுவரவில்லை. எனவே தயவுசெய்து பிரதேச வாரியான பிரச்சினைக்கு வித்திடாத வகையில் நான் கூறிய கருத்துகளுக்கு அமைய சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கௌரவ துணைத்தவிசாளர்

கௌரவ உறுப்பினர் ஜமீல் அவர்கள் அவர் முன்மொழிந்த பிரேரணையில் திருத்தம் எதையும் சேர்க்க விரும்பவில்லை. இந்த சபையில் ஒரு பிரேரணை தீர்மானிக்கப்பட்டுச் சென்று விட்டால் இது அமுலாகும் என்ற நிலையும் இல்லை. கௌரவ உறுப்பினர் றபீக் அவர்கள் இப்பிரேரணைக்கு எதிர்க்கருத்துக்கள் கொண்ட ஒரு பிரேரணையை அடுத்த கூட்டத்தில் கொண்டு வந்து அதனையும் நிறைவேற்றலாம். இன்று இந்தப் பிரேரணையை நான் வாக்கெடுப்பிற்கு விடுகின்றேன்.

தீர்மானம் இல. 01

மேலுள்ள கவனயீர்ப்புப் பிரேரணை சபையில் ஆய்வு செய்யப்பட்டு சபையில் ஏகமனதான ஆதரவு கிடைக்காமையினால் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக 5 உறுப்பினர்களும், எதிர்த்து 2 உறுப்பினர்களும் நடுநிலையாக 2 உறுப்பினர்களும் வாக்களித்தார்கள். மேலதிக வாக்குகளினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

STAR OFFSET
SAINTHAMARUTHU

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org